மாநில திட்ட இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை-600006.

மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள்,

ந.க.எண்: ACE/118/ஆ3/CG/ஒபக/2022, நாள்: 04..08.2022

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி –அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான "உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி" அறிமுக பயிற்சி – 08.08.2022 முதல் 22.08.2022 வரை நடைபெறுதல்- தெரிவித்தல்- சார்ந்து.

பார்வை : 1. அரசாணை நிலை எண்:5, பள்ளிக் கல்வித் துறை (ப.க.5(1)) துறை நாள்: 21.02.2022.

2. இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்:ACE/118 /ஆ3/CG/ஒபக/2022, நாள்: 11.07.2022.

*********

பார்வை-1ல் காணும் அரசாணையில், அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு, உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் வழிகாட்டும் ஆலோசனை மையம் உருவாக்கப்படும். இதற்கென தனியே கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாக கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர் வகுப்புகள் நடத்தப்படும். முன்னாள் மாணவர்களைக் கொண்டு அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத் தொடர் நெறிப்படுத்தும் (Continuous Mentoring) முறையும் அறிமுகப்படுத்தப்படும் என கூறப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்க ஏதுவாக "உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி" கட்டகம் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்டு அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

**2. உயர்கல்வி ,வேலைவாய்ப்பு வழிகாட்டி அறிமுக பயிற்சி: 2022-23**

தற்போது, அனைத்து மாணவர்களும் **"உயர்கல்வி ,வேலைவாய்ப்பு வழிகாட்டி"** கட்டகம் மூலம் முழுமையான பயன் பெற வேண்டும் என்கின்ற நோக்கில், இரண்டாம்

கட்டமாக அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் இணையவழி (Online) வாயிலாக இக்கட்டகத்தில் அறிமுக பயிற்சி 08.08.2022 முதல் 22.08.2022 வரை முதன்மை பயிற்சியாளர்களால் (DIET faculties) பின்வரும் வழிமுறைகளை பின்பற்றி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. **பயிற்சி அட்டவணை:**

- இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் பள்ளிவாரியாக அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டிய அமர்வுகள் எண், நாள், நேரம் மற்றும் தெரிவு செய்ய வேண்டிய பயிற்சி link number சார்ந்த அட்டவணை (excel sheet) வழங்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு நாளும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாளில் காலை 10 மணி முதல் 12 மணி வரை 5 அமர்வுகளும் (sessions) மற்றும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையிலும் 5 அமர்வுகளும் என ஒரு நாளில் 10 அமர்வுகளில் பயிற்சி வழங்கப்படும். **தலைமையாசிரியர் தனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அமர்வில் மட்டுமே பயிற்சி பெற வேண்டும்.**
- ஒர் அமர்வுக்கு, 30 அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் வீதம், ஒர் நாளில் 300 (2 X 5X 30 =300) தலைமை ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

4. **இணையவழி பயிற்சி வழிகாட்டு நெறிமுறைகள்:**

- பயிற்சிக்கான இணைய இணைப்பினை (Training link) குறித்த நேரத்தில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களும் பெற்று பயிற்சியில் பங்கேற்பதற்கு ஏதுவாக, அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் Whatsapp Group மாவட்ட அளவில் உருவாக்கப்பட வேண்டும். ஏற்கனவே இத்தகு Whatsapp Group செயல்பாட்டில் இருப்பின் அதனையும் பயன்படுத்தலாம்.
- மாநில திட்ட இயக்ககத்திலிருந்து, சார்ந்த மாவட்ட ஒருங்கிணைப்பாளர்- தர கண்காணிப்பு திட்ட கூறு (DC- Quality) Whatsapp எண்ணிற்கு பயிற்சி வழங்கப்படும் Link-க்குகள் அனுப்பப்படும்.
- ஒரு நாளில் காலை, மாலை என இருவேளைக்கும் தலா 5 அமர்வுகள் என 10 link-கள் பகிரப்படும்.

- அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள லிங்க் எண்ணை சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் தெரிவு செய்து பயிற்சியாளர்களுடன் இணைத்து பயிற்சியில் கலந்துக் கொள்ள வேண்டும்.
- தலைமையாசிரியர்கள் தங்களது Smart phone /High tech lab பயன்படுத்தி பயிற்சி பெறலாம்.
- Carrier Guidance உட்கூறு சார்ந்த அனைத்து செயல்பாடுகளும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்- தர கண்காணிப்பு திட்ட கூறு (DC- Quality) மேற்கொள்ள வேண்டும்.

**5. கண்காணித்தல்**

**(அ) ஒன்றிய அளவில்**

- அனைத்து ஒன்றியங்களிலும் பணியாற்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மேற்காண் பயிற்சியினை அட்டவணையில் உள்ளவாறு குறித்த **நாளில்**, குறித்த **நேரத்தில்**, குறித்த **அமர்வில்**, குறித்த **link number** பயன்படுத்தி பயிற்சியில் பங்கு பெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.
- பயிற்சி நடைபெறும் நாளுக்கு முன்னதாக அனைத்து தலைமை ஆசிரியர்களும் மாவட்ட whatsapp குருப்பில் இணைந்துள்ளனரா என்பதனையும் உறுதி செய்தல் வேண்டும்.
- லிங்க்கில் இணைந்து, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் விவரங்களை பின்வருமாறு பராமரித்து மாவட்ட திட்ட இயக்ககத்திற்கு ஒவ்வொரு நாளும் அனுப்புதல் வேண்டும்.

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | ஒன்றியத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளின் பெயர்கள் | பயிற்சி பெற்ற தலைமை ஆசிரியர் | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

(ஆ) மாவட்ட அளவில்

- மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார கல்வி அலுவலர்கள் அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களும் பயிற்சி பெற்றுள்ளனரா என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.
- பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் விவரங்களை ஒன்றியங்களில் இருந்து பெற்று மாநிலத்திட்ட இயக்ககத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

6. எனவே, இச்செயல்முறையின் நகலை அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் நகலாக அனுப்பி, மேற்காண் வழிமுறைகளை பின்பற்றி, " உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி " அறிமுக பயிற்சியில் தவறாமல் கலந்து கொண்டு பயன் பெறுவதை அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பயிற்சி அட்டவணை (excel soft copy)

05/08/2022

மாநிலத்திட்ட இயக்குநருக்காக

**பெறுநர்**

1. முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்

**நகல்**

**(முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)**

1. மாவட்ட கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்
2. வட்டார கல்வி அலுவலர்கள், அனைத்து ஒன்றியங்கள்
3. பேராசிரியர்கள், மாவட்ட கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அனைத்து மாவட்டங்கள்
4. அனைத்து தலைமை ஆசிரியர்கள்(அரசு மேல்நிலைப் பள்ளிகள்)
5. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்
6. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், அனைத்து ஒன்றியங்கள்
7. அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள், அனைத்து ஒன்றியங்கள்